25.09.2025

CC No. 9/2024

ம.சா.1 குணசுந்தரி க/பெ. சுரேஷ், காரைக்குடி

<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. என் கணவர் ஆட்டோ ஓட்டுனர் என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட வருமானம் எதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் வருமானவரி கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள புகார் ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு அதில் உள்ள விபரங்கள் தெரியாது. நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு விபரம் தெரியுமா என்றால் ஆங்கிலத்தில் இருப்பதால் எதுவும் தெரியாது. புகார் மற்றும் அறிவிப்பு அனுப்புவதற்கு எனது வழக்கறிஞருக்கு முழு விபரம் சொல்லாத காரணத்தில்தான் அதில் என்ன எழுதியிருந்த விபரம் தெரியவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் மேற்படி விபரங்த்தை என்னிடம் தமிழில்தான் காண்பித்தார். எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்ற விபரத்தை நான் எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் புகாரில் சொல்லவில்லை.

2) எனது முதல் விசாரணையில் எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வழக்குகாசோலையை எதிரி எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்துக்கொடுத்தார் என்ற விபரத்தை புகாரிலோ, அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணத்தை எதிரிதான் வாங்கி கொண்டுவந்தார். ம.சா.ஆ.1 ஆவணத்தில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் எதிரியிடம் வட்டி எதுவும் கோரவில்லை. மேற்படி யார் சொல்லி யாரால் எழுதப்பட்டது என்றால் வினோதா சொல்ல சொல்ல சொக்கலிங்கம் என்பவரால் எழுதப்பட்டது. மேற்படி ஆவணத்தை வினோதா கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வட்டி விகிதம் குறைக்கப்பட்டதாக சொல்லும் போது ம.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி விபரம் குறிக்கப்பட்டதா என்றால் இல்லை. அந்த காலக்கட்டத்தில் மேற்படி ஆவணம் என்னிடம் தான் இருந்தது. உண்மையில் மேற்படி

ஆவணம் அந்த காலக்கட்டத்தில் இருந்திருந்தால் வட்டிவிகிதம் குறைக்கப்பட்ட விபரத்தை அதில் எழுதப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

3) எனது நிரூபண வாக்குமூலத்தில் எதிரி தான் தான் பெற்றுக்கொண்ட கடனிற்காக பகுதி தொகைக்காக தாவா காசோலையை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மீதத்தொகைக்காக கணக்கு வழக்கு எதுவும் உள்ளதா என்றால் இல்லை. மொத்த தொகையே 4 லட்சத்து 68 ஆயிரம்தான். பகுதி தொகை என்று எனது புகாரில் குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு. மேற்படி வழக்கை தாக்கல் செய்ய நான் நேரடியாக சொல்லாததால்தான் பகுதி தொகை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ரூ. 4 லட்சம் தொகையை எந்த வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தேன் என்றால் பாரத வங்கியில் இருந்து எடுத்தகொடுத்தேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். உண்மையாகவே வங்கியில் இருந்து பணம் எடுத்துக்கொடுத்திருந்தால் ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) எதிரியை எப்படி தெரியும் என்றால் மகளிர் மன்றத்தில் நான் லோன் வாங்கியிருந்தேன். அவரும் லோன் வாங்கியிருந்தார் அதன் மூலம் தெரியும். எந்த மன்றம் மூலமாகவும் எதிரி எனக்கு அறிமுகம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் குடும்ப நபர்கள் பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியும். கடன் கொடுத்ததாக சொல்லும் காலக்கட்டத்திலும், கடனை திருப்பி கேட்டதாக சொல்லும் சமயத்திலும் நான் எதிரிக்கு போன் எதுவும் செய்யவில்லை. நேரில் கேட்டேன். எதிரியின் போன் நம்பர் தெரியாததால் நான் போன் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடன் கொடுத்ததாக சொல்லும் காலக்கட்டத்தில் எதிரி என்ன தொலைபேசி எண் வாங்கினேன் என்றால் நினைவில்லை. உண்மையில் நான் கடன் கொடுத்ததாக சொல்லும் காலக்கட்டத்தில் தொலைபேசி எண் வாங்கியிருந்தால் அதை சொல்லியிருப்பேன் என்றாலும், நான் கடனும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல.

5) எதிரியை எந்த மன்றம் மூலமாக தெரியும் என்றால் சிவசக்தி, கிராம விடியல் ஆகிய மன்றங்களின் மூலம் தெரியும். மேற்படி மன்றத்தில் உள்ள நபர்களை விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். எதிரி மீது சரவணன் என்பவர் இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. காரைக்குடி கற்பக விநாயகர் நகரை சேர்ந்த ரேவதி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரேவதி என்பவருடன் எனக்கு எந்த வரவு செலவும் இல்லை என்றால் அவரை யார் என்றே எனக்கு தெரியாது. ம.சா.ஆ. 8 ஆவணம் எனது வங்கி கணக்கு நகலின் படி ரேவதி என்பவர் எனது கணக்கிற்கு ரூ. 10 ஆயிரம் செலுத்தியிருக்கிறார் என்றால் அவர் வேறு நபர், அவர் எனது உறவினர். 21.09.2023 ம் தேதியின்று ரேவதி என்பவரின் G Pay எண்ணில் இருந்து எனது எண்ணிற்கு ரூ. 500 பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அவர் எனது உறவினர். ம.சா.ஆ.8 ஆவணத்தின் படி பணம் பரிமாற்றம் செய்யப்பட்டவரின் முகவரி studiokkdi-1@okici என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி G pay ID கற்பக விநாயகர் நகரை சேர்ந்த ரேவதி என்பவரின் முகவரி என்று சொன்னால் சரியல்ல. எனது இந்தியன் வங்கி கணக்கை இன்று வரை முழுவதுமாக எடுத்துப்பார்த்தால் ரேவதி என்பவருக்கும் எனக்கும் உள்ள வரவு செலவு பற்றிய விபரம் தெரியவரும் என்றால் சரியல்ல. இன்று வரையிலான எனது வங்கி கணக்கு ஆவணத்தை நான் தாக்கல் செய்ய தயாரா என்றால் தயாராக இருக்கிறேன்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.09.25 15:08:16 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)